# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | சைவநெறி I<br>Religion I | நேரம் :-<br>1மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 12 \| T \| I | |

**கவனிக்க:**

**எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**

**1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

### பகுதி -I

1. உத்தராயண தொடக்க நாளாகக் கருதப்படுவது

   1. தைப்பொங்கல் 2. வருடப்பிறப்பு 3. ஆடிப்பிறப்பு 4. தீபாவளி

2. "படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்.." என்று பாடியவர்

   1. திருவள்ளுவர் 2. திருஞானசம்பந்தர் 3. திருமூலர் 4. மாணிக்கவாசகர்

3. நட்சத்திரங்களுள் பதினொராவதாக அமைவது

   1. பூசம் 2 பூரம் 3. மகம் 4. பூரட்டாதி

4. மனிதப் பிறவியின் வாழ்க்கையை நிர்ணயிப்பவர்

   1. சனிபகவான் 2. ஆஞ்சநேயர் 3. பிள்ளையார் 4. யமன்

5. சூரியனை இயங்கச் செய்யும் தேவனாகக் கருதப்படுபவன்

   1. காயத்திரி 2. இந்திரன் 3. அக்கினி 4.சவிதா

6. திருக்கூட்டச் சிறப்பு இடம் பெறும் சருக்கம்

   1. இலை மலிந்த சருக்கம் 2. திருமலைச் சருக்கம் 3. திருநின்ற சருக்கம்

   4. கறைகண்டன் சருக்கம்

7. கீழ்வருவனவற்றுள் விரதம் அல்லாதது

   1.மகாமகம் 2. ஆடிப்பூரம் 3. சிவராத்திரி 4. கிருஸ்ணஜெயந்தி

8. ஆண்டாள் அவதரித்த தினம்

   1. ஆடிப்பூரம் 2. ஆவணிச்சதுர்த்தி 3. ஆனிப்பூரம் 4. மார்கழித்திருவாதிரை

9. உற்சவம் என்பதில் “உத்” என்பது குறிப்பது

1.ஞானம் 2. மோட்சம் 3. ஐந்தொழில் 4. பெரிய

10. குமரக் கடவுளை முழுமுதற் கடவுளாகப் போற்றும் நெறி

1. சௌரம் 2. சைவம் 3. கௌமாரம் 4. சாக்தம்

11. மனிதனால் படைக்கப்படாதவை என்ற காரணத்தால் வேதங்களுக்கு வழங்கப்படும் பெயர்

1. த்ருஷ் 2. ஸ்மிருதி 3. அபௌருசேயம் 4. சுயம்பு

12.“அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத…என்ற பாடலில் போற்றப்படுபவர்

1. திருப்புன்கூர்ப் பெருமாள் 2. ஏகாம்பரநாதர் 3. அண்ணாமலையார்

4. சுந்தரேஸ்வரர்

13. திருமுறை பாடியோர் எண்ணிக்கை

1. 27 2. 14 3. 12 4. 09

14. தட்சணாயன மாதங்களில் ஒன்று

. 1. தை 2. பங்குனி 3. புரட்டாதி 4. வைகாசி

15. கடக சங்கிராந்தி எனப்படும் பண்டிகை

1. வருடப்பிறப்பு 2. தீபாவளி 3. தைப்பொங்கல் 4. ஆடிப்பிறப்பு

16. மெய்கண்டாருக்கு அப் பெயரைச் சூட்டியவர்

1. அருணந்தி சிவாச்சாரியார் 2. பரஞ்சோதி முனிவர் 3. கச்சியப்பர் 4. திருமூலர்

17. சிவஞானபோதத்தின் வழிநூலாக அமைவது

1. சிவப்பிரகாசம் 2. திருவருட்பயன் 3. உண்மைவிளக்கம் 4. சிவஞானசித்தியார்

18. பரபக்கம், சுபக்கம் என்ற இரு பகுதிகளைக் கொண்ட சித்தாந்த நூல்

1. திருவருட்பயன் 2. சிவஞானசித்தியார் 3. உண்மைவிளக்கம் 4. சிவஞானபோதம்

19. கொடிமரம், கொடிச்சீலை என்பன முறையே குறித்து நிற்பது

1. பதி, பாசம் 2. பசு,பதி 3. பதி,பசு 4. பாசம்,பசு

20. “மடையில்வாளை…” என்ற திருப்பதிகம் பாடப்பட்ட தலம்

1. திருக்கோலக்கா 2. சிதம்பரம் 3. திருப்பெண்ணாடகம் 4. திருப்பெருந்துறை

21. உண்மைவிளக்கம் என்ற நூலின் ஆசிரியர்

1.மெய்கண்டதேவர் 2. பரஞ்சோதி முனிவர் 3. அருணந்தி சிவாச்சாரியார் 4.மனவாசகங்கடந்தார்

22. பெரியபுராணத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

1. 14 2.13 3.17 4.11

23. பூர்வக்கிரியைகளுள் ஒன்று

1. திருமணம் 2. ஏகோதிட்டம்3. மாசிகம் 4.மாளயம்

24. விருந்தோம்பல் மூலம் பேணப்படும் பண்பு

1. நலிந்தோரைப் பேணல் 2. நற்பெயர் கிடைக்கும் 3. புகழ் கிடைக்கும்

4. மீண்டும் உதவி செயவார்கள்

25. தேர் திருவிழா குறிக்கும் தத்துவம்

1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல்

26. அருணந்தி சிவாச்சாரியரது குருபூசைத் தினம்

1. புரட்டாதிப்பூரம் 2. வைகாசிச்சதயம் 3. சித்திரைப்பரணி 4.ஆடிமகம்

27. திலகவதியார் தங்கியிருந்த மடத்தின் பெயர்

1. திருச்செந்தூர் மடம் 2.திருவாவடுதுறை மடம் 3.திருவதிகை மடம் 4.திருவையாற்றுமடம்

28. காலத்தால் முந்திய இசை நூல்

1. இருக்கு 2. யசுர் 3.சாமம் 4. அதர்வணம்

29. 2022ம் ஆண்டின் சித்திரைப் புத்தாண்டின் பெயர்

1. விகார 2.சர்வாரி 3.பிரவ 4. சுபகிருது

30. பிரம்மபுரம் என அழைக்கப்படும் தலம்

1. சீர்காழி 2. சிதம்பரம் 3. திருநல்லாறு4. திருவையாறு

31. பிரபுத்தபாரத என்ற இதழின் ஆசிரியராக விளங்கிய ஈழத்தவர்

1. சுவாமி விவேகானந்தர் 2. சுவாமி விபுலானந்தர் 3. நாவலர் பெருமான் 4. சிம்மயானந்தர்

32. யாகங்களின் போது மேற்கொள்ளவேண்டிய சடங்கு முறைகளை விளக்குவன.

1.மந்திரங்கள் 2. பிராமணங்கள் 3.ஆரணியங்கள் 4. உபநிடதங்கள்

33. கர்ம காண்டத்தைச் சேர்ந்த வேதப்பகுதிகள்

1. பிராமணங்கள்>ஆரணியங்கள் 2. ஆரணியங்கள், மந்திரங்கள்

3. பிராமணங்கள், உபநிடதங்கள் 4. மந்திரங்கள், பிராமணங்கள்

34. அப்பர் சுவாமிகள் சமணர்களால் மறைக்கப்பட்ட சிவலிங்கத்தை மீட்ட திருத்தலம்

1. திருவீழிமிழலை 2. திருப்பழையாறு 3. திருவீரட்டானேஸ்வரம் 4. திருவையாறு

35. ஆன்மாக்கள் செய்த வினைகளின் கூட்டம்

1. கன்மம் 2. சஞ்சிதம் 3. ஆணவம் 4. நல்வினை

36. “கல்லூர்ப் பெருமணம்” என்னும் பதிகத்தைப் பாடியவர்

1. பரசமயகோளரி 2. ஆளுடைய அரசு 3. நம்பியாரூரர் 4. வாகீசர்

37. தோத்திர நூலாகவும்,சாத்திர நூலாகவும் விளங்குவது

1. திருவாசகம் 2. திருப்புராணம் 3. திருவிசைப்பா 4. திருமந்திரம்

✶பின்வரும் அட்டவணையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A-அறிவு | D – அனல்வாதம் | G-வாயு |
| B-தேவாரமுதலிகள் | E- தந்திரம் | H-திருத்தூங்கானை மாடம் |
| C-தமிழாகமம் | F- மந்திரங்கள் | I- ஒன்பது பிரிவு |

38. வேதத்துடன் தொடர்புடைய தொகுதி

1. AGD 2. AFG 3. GFD 4. EHI

39. ஆளுடைய பிள்ளையாருடன் தொடர்புடைய தொகுதி

1. BGI 2. AFG 3. GHD 4. BDH

40. அட்டமா சித்திகள் கைவரப் பெற்ற யோகியர் ஒருவருடன் தொடர்புடைய தொகுதி

1. CDF 2. CEI 3. ABC 4. CFI (01X40=40 புள்ளிகள்)